[2004 ஜூலை 27

38—

சுற்றுலா மையம்

*9716—திருமதி கு. கலாவதி:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, சுற்றுலா மையமாக அறிவிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையைச் சுற்றுலா மையமாக அறிவிப்பது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கு. கலாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்கி மலைவாழ் மக்களை என்றுமே மறக்காத அரசு நமது அம்மா அரசு. தமிழக வரலாற்றிலேயே, முதன்முதலில் மலைவாழ் மக்களின் குறைகளைக் களையவே அமைச்சர் பதவியும் வழங்கி, இந்த அவைக்குப் பெருமை சேர்த்த ஒரே முதலமைச்சர் நமது இதய தெய்வம் அம்மா அவர்கள்தான்.

ஒவ்வொரு வருடமும் ஆடி பதினெட்டு அன்று வல்வில் ஓரி விழா கொல்லிமலையில் மிகவும் சிறப்பாக நடக்கும். அப்போது மிகவும் சக்தி வாய்ந்த அரப்பளீஸ்வரர் சுவாமியைத் தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அதன் அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்வீழ்ச்சியில் 300 அடி உயரத்தில் இருந்து நீர் கொட்டுகிறது. இந்த எழில்மிக்க நீர்வீழ்ச்சியில் குளித்துவர 600 படிக்கட்டுகள் இறங்கி ஏறி வரவேண்டிய நிலை உள்ளது. இந்த நீர்வீழ்ச்சியில் இயற்கை மூலிகை கலந்து வருவதால் உடலில் உள்ள நோய்கள் நீங்கும் என்பது சிறப்பு அம்சமாகும். எனவே, சுற்றுலாப் பயணிகளின் சிரமத்தைப் போக்க இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு, நீர்வீழ்ச்சிக்குச் செல்ல இழுவை

2004 ஜூலை 27]

இரயிலையும், கோயில் அருகில் குழந்தைகள் பூங்கா ஒன்றையும் மற்றும் அப்பகுதிக்கு அடிப்படை வசதிகளையும் உருவாக்கித்தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. ஆனால் சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில்கொண்டு கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாக்கும் அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. நாமக்கல் மாவட்டம் குறித்த சுற்றுலா சிறப்பியல்புகளைச் சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைக்கவும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் சுற்றுலா அலுவலகம் சேலத்தில் இயங்கி வருகிறது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தமிழக அரசால் மாவட்ட உலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி இளைஞர் விடுதி ஒன்று கட்டப்பட்டு அதனை உள்ளூர் பஞ்சாயத்து பராமரித்து வருகிறது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தமிழக அரசால் கலை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் சுற்றுலாத் துறையின் மூலமாக ஆண்டுதோறும் கோடை விழா நடத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல கொல்லிமலையில் உள்ள அரப்பளீஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் நீர்வீழ்ச்சி உள்ளது. இதில் வரும் நீர் மூலிகை மருத்துவ குணம் நிறைந்துள்ளதாக எண்ணப்படுகிறது. இந்நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் படிகளுக்கு இருபுறமும் கைப்பிடி அமைப்பது அரசின் ஆய்வில் உள்ளது. நீர்வீழ்ச்சிக்குச் செல்வதற்கு இழுவை இரயில் அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையைப் பெற்றும், அரசு நிதிநிலைமைக்கேற்பவும் அங்கே வரும் சுற்றுலாப் பயணிகள் வருகையைக் கணக்கில் கொண்டும் சிந்தித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 27

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க முடியாது என்று கூறி இருக்கின்றார்கள். பலமுறை இந்த மன்றத்திலே பேசப்பட்டு, அதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும் என்று பலவிதமான கோரிக்கைகள் வைத்து இருக்கின்றோம். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் முன் மொழிந்ததை அந்த மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் வழி மொழிந்து இருக்கிறேன். அங்கே பல வசதிகள் இருக்கின்றன. வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் குறைந்த செலவிலே நீண்ட காலமாக அங்கே தங்கிச் செல்கிறார்கள். தற்போது கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற மலைகளுக்கு இணையாக அந்த கொல்லிமலை பிரசித்துவம் பெற்று விளங்குகிறது. அங்கே அந்த நீர்வீழ்ச்சியிலே குளித்தால், பல நோய்கள் எல்லாம் நீங்கும் என்ற ஐதீகம் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை நேரிலே அங்கே வந்து அதைப் பார்த்துவிட்டாவது, அதைச் சுற்றுலா மையமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து, அதிகப்படியான வசதிகள் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அங்கே அரப்பளீஸ்வரர் மலை நீண்ட நாட்களாகப் பயன்பெறாமல் இருக்கிறது. அதற்கும் சுற்றுலாத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு அந்தக் கொல்லிமலைக்குக் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மலைப் பாதை அமைப்பதற்கு சிறப்பு நிதித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தவிதத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிப்பதில்லை. இருப்பினும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி சுற்றுலாப் பயணிகள் வருகையையொட்டி எந்த இடத்திலும், அதற்குத் தேவையான

2004 ஜூலை 27]

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் செஞ்சிக்கோட்டை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொல்லிமலை, வினா எண் 39, திரு. துரை. கி. சரவணன் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

39—

ஊராட்சியைப் பிரித்தல்

***22878—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், நங்குடி ஊராட்சியை நங்குடி, விழுப்பெருந்துறை என்று இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், நங்குடி ஊராட்சியை, நங்குடி, விழுப்பெருந்துறை என்று இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. நடராஜன்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரும்பாலான சிற்றூராட்சிகள், 1000 வாக்காளர்களுக்குக் குறைவாகவும், பெரும்பாலான சிற்றூராட்சிகள் 7500 வாக்காளர்களுக்கு அதிகமாகவும் உள்ளன. என்னுடைய தொகுதியில் உள்ள குற்றாலம் ஒன்றியத்தில் உள்ள கோமளம் ஊராட்சி எட்டாயிரத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாக இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய ஊராட்சிகளை